# பரலோக பொக்கிஷங்கள்

**மேலானவைகளையே நாடுங்கள்!** (கொலோசெயர் 3:2)



## கர்த்தர் வருவார், எனக்காக யாவும் செய்து முடிப்பார்!

அன்று, பூரண அர்ப்பணத்தோடு, தகப்பன் வீட்டை விட்டு, அழைத்தவரை 1981–ம் ஆண்டு மார்ச் மாதம் பின்தொடர்ந்து வந்த நான்! ஊழியத்தின் முதல் மாதத்தில் எனது பிறந்த நாளுக்கென்று, சொற்ப நூறு ரூபாய் கொண்டு ஷர்ட் வாங்க முயற்சித்து, தடங்கல் ஏற்பட்டு, பிறந்தநாளை கடந்து செல்ல வேண்டிய சில மணிநேரங்கள் முன்பாக "புதிய சிறப்பான ஷர்ட்" கொண்டு வந்து தந்தார் ஆண்டவர்! இந்த ஆரம்ப ஊழிய காலத்திலிருந்து நான் கற்ற மிகப்பெரிய பாடம் "மன விருப்பம் அறியும் கர்த்தர், வருவார்! சிறப்பானதைச் செய்வார்!" என காத்திருக்க கற்றுக்கொண்டேன்!

நானாக யாதொன்றும் செய்யாமல், எனக்காக யாவும் செய்து முடிக்கும் கர்த்தரை 43–ஆண்டுகளாய் ஜீவியத்திலும், ஊழியத்திலும் அனுபவித்து வாழ்கிறேன்! (சங்.138:8). இந்த புதிய ஆண்டு முழுவதும், உங்களுக்கும், உங்கள் குடும்பத்திற்கும், உங்கள் சபைக்கும், அப்படியே செய்வாராக!

*-tr*

பெட்டகம் 41
பரல்கள் 01
ஜனவரி 2025



## தூக்குமேடையை "ராஜ பவனியாய்" மாற்றிய தேவன்!

அன்று, எஸ்தர் புத்தகத்திலுள்ள மொர்தெகாயுவிற்கு நடந்த சம்பவத்தை சற்று எண்ணிப் பாருங்கள்! தன் காழ்புணர்ச்சியை நிறைவேற்றும்படி, இந்த மொர்தெகாயின் இழிவான சாவிற்குத் தூக்கு மேடையை ஆமான் அன்று இரவு முழுவதும் தயார் செய்து கொண்டிருக்கிறான்!

மறுபுறத்திலோ, அவனை எவ்விதம் தேசத்தில் கனமடையச் செய்வது என, தேவன் தன் மிகுந்த அன்பில் திட்டம் தீட்டிக்கொண்டிருக்கிறார்!! மொர்தெகாயோ, எதுவுமே அறியாமல் தூங்கிக் கொண்டிருந்தான். ஒருவேளை, அந்த ராத்திரியில் அவனை எழுப்பி "தூக்கு மேடையை மாத்திரம்"காண்பித்திருந்தால் அவன் எவ்வளவு கதிகலங்கிப் போயிருப்பான் என்பதை எண்ணிப் பாருங்கள்!

இன்றும் அப்படித்தான், அநேக கிறிஸ்தவர்கள் 'துன்பங்களை மாத்திரம்' காண்கிறார்களே அல்லாமல், "தெய்வ அன்பின் பாதுகாப்பையோ" காணத் தவறுகிறார்கள். இவர்களின் கண்கள் "மொர்தெகாயின் நன்மைக்கு செயல்பட்ட" தெய்வ அன்பைக் கண்டிருந்தால், துன்பமென்னும் மலையை நிமிர்ந்த தோளோடு எதிர்த்து நின்றிருப்பார்களே! அந்த மலை, சமுத்திரத்தின் நடுவில் கவிழ்ந்துவிழும் அற்புத ஜெயத்தையும் கண்டிருப்பார்களே!!

*-Ed*

**2025 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா ரூ.170/- தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு ஜனவரி 10-ம் தேதிக்குள் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும்.நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall

## சுமைகள், உயர பறக்கும் சிறகுகளாய் மாறின!

*அவர் தந்த செட்டைகள், அவரிடம் சேர்க்கும்*

*உயர, உயரப் பறக்கும் பறவைகளின் செட்டைகள் ஆதியில் எவ்வாறு தோன்றியது என்பதை அறிவீர்களா? பட்சிகளை ஆண்டவர் ஆதிகாலத்தில் படைக்கும்போது, சிறகுகளோடு படைக்கவில்லை. ஆகிலும் அந்த பட்சிகள் மகிழ்ச்சியோடுதான் அலைந்து திரிந்தன. பின்பாக தேவன், செட்டைகளைப் படைத்து, அந்த பறவைகளுக்கு முன்பாக வைத்தார். அவைகளைப் பார்த்து தயங்கி நின்ற பறவைகளிடம் “இந்த செட்டைகளின் சுமையை பார்த்து தயங்காதிருங்கள், அவைகளை உங்கள் முதுகில் ஏற்றுத் தாங்கிக் கொள்ளுங்கள்!” என அழைத்தார். அந்த நாள் வரை, இந்த பறவைகளுக்கு இனிய குரல் இருந்தன! நன்றாக பாடின! சின்ன இறகுகள் சூரிய ஒளியில் பளபளத்தன!*

> “ **அப்படியெல்லாம் இருந்தும் வானுயர பறக்கும் அனுபவம் பறவைகளிடத்தில் இருக்கவில்லை. ஆகவேதான், தேவன் தங்கள் காலடியில் வைத்தப் பாரத்தை தூக்கி சுமக்க வெகுவாய் தயங்கின.**

*ஆகிலும், மிகுந்த தயக்கத்தோடு, தங்கள் அலகுகளால் அந்த இரண்டு இறக்கைகளையும் தூக்கி தங்களின் இரண்டு தோள்களில் வைத்துக்கொண்டன! ஆரம்பத்தில் அந்த செட்டைகள், தங்களை அழுத்தும் பாரங்களைப்போல் அந்த பறவைகளுக்குத் தோன்றின. மெல்ல மெல்ல அந்த செட்டைகளை தங்கள் இருதயத்தோடு பறவைகள் வைத்துக்கொள்ள, அந்த செட்டைகள் வேகமாய் வளர்ந்து பறவைகளின் உடலோடு ஒட்டிக்கொண்டன. இவ்வாறு தேவன் தந்த பாரங்களை ஆச்சரியமாய் அந்த பறவைகள் பார்த்து கொண்டிருந்த அதே நேரத்தில், மெல்ல மெல்ல செட்டைகளை அந்த பறவைகள் உயர்த்த தொடங்கின. மேலும் கீழுமாய் உயர்த்த உயர்த்த, அந்த செட்டைகள், பறவையின் உடம்பை உயர உயர்த்தி ஆகாய மேகத்திற்குள் மகிழ்ச்சியுடன் பறக்க உதவி செய்துவிட்டன!*

"

அந்த மகிழ்ச்சியில், பறவைகள் தேவனை பார்த்து "ஓ எங்கள் அன்பு சிருஷ்டி கர்த்தாவே நீர் தந்த சுமைகள், வானுயர பறக்கும் சிறகுகளாய் மாறிவிட்டதே!" என மனமுவந்த நன்றிகளை தேவனுக்கு தெரிவித்தன!

இது நம் சிருஷ்டி கர்த்தாவின் புகழ் சேர்க்கும் நன்மையான சிந்தனைகளேயாகும்! இன்று, நாம் அனைவருமே சிறகுகள் இல்லாத பறவைகள்! நமக்கு ஒப்புவிக்கப்பட்ட கடமைகளும், பொறுப்புகளும், ஊழியங்களும் தேவனால் வழங்கப்பட்ட பாரமுள்ள செட்டைகளாகும்! மானிடர்களில் பெரும்பாலோர் தேவன் அருளிதந்த இவ்வித பாரங்களை வெறும் சுமையாகவே எண்ணி, பாரங்களை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ள தயங்கி ஒதுங்கி நிற்கிறார்கள்! அந்த பறவைகளுக்கும், ஆரம்பத்தில் தேவன் தந்த அந்த செட்டைகள் பாரங்களாகவே தோன்றின. பின்பு அந்த பறவைகள் தேவனுக்கு கீழ்படிந்து தங்கள் முதுகில் ஏற்றுக்கொண்டவுடன், அது பலத்த செட்டைகளாய் வளர்ந்து, தன் சிருஷ்டி கர்த்தாவை நோக்கி 'மிக இலகுவாய்' உயர உயர பறந்து அவரோடு நெருங்கிச் சேர்ந்துவிட்டன!

"

தேவன் தந்த வாழ்வின் சுமைகள் எதுவாயிருந்தாலும், அதை மகிழ்ச்சியுடன் ஏற்று, அன்புடன் நம் இருதயத்தில் தாங்கிக் கொண்டால், அது நமக்கு பெரியதொரு ஆவிக்குரிய ஆசீர்வாதமாய் மாறிவிடும் அல்லவா?

*இந்த பாக்கியம் பெற்ற இவர்களே "கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து உயர உயர எழும்புவார்கள்" என ஏசாயா 40:31-ம் வசனம் கூறுவது, இந்த புதிய ஆண்டில் பழையது அகற்றி புத்துணர்ச்சியூட்டும் மிகுந்த பெலனையும் நம்பிக்கையையும் நமக்குத் தருகிறது! இதற்கு மாறாக, நமது உதவிக்காகவே தரப்பட்ட செட்டைகளின் பாரத்தை **தாழ்த்தி தூக்கிக்கொள்வதற்கு மறுத்து விடாதிருப்போமாக!** வருடத்தின் இந்த முதல் நாள் தொடங்கி 365 நாட்களும் உயர உயர பறந்து வரும் உன்னத மகிழ்ச்சியாய் மாறுவதாக! ஒவ்வொரு நாளுக்குரிய 'சந்தர்ப்பங்களும்' நாம் தேவனிடம் உயர பறந்து வரும் சிறந்த உன்னத வளர்ச்சியேயாகும்!*

முடிவாக, உங்கள் முதுகுக்கு ஏற்ற அளவை அறிந்து, தன் சொந்த கையினால் தேவன் வனைந்து தரும் செட்டைகள், அது உங்களுக்குரிய செட்டைகளேயாகும்! விண்ணை அண்ணாந்து பாருங்கள். அங்கு ஏற்கனவே அழகிய கீதம் பாடி, செட்டைகள் அடித்து, தேவ சமூகத்தில் பரிசுத்தவான்கள் பறந்து கொண்டிருக்கிறார்கள்! இதுவே உங்கள் அனுபவமாயும் மாறுவதாக, ஆமென்!

- Mrs.சார்லஸ் கஃவ்மென்

## ‘தேவனோடு நெருங்கிய உறவு’ இல்லாமல், கிறிஸ்தவம் இல்லை!

*நாம் நொறுங்கிட ஒப்புக்கொடுப்பதே தேவனை நெருங்கும் வழி*

என்னுடைய வாலிப பிரயாத்திலிருந்தே, தேவனிடத்தில் மனந்திரும்பி வந்த எனக்கு “தேவனோடு நெருங்கிய ஐக்கியம்” தொடங்கியது. தேவன் மீதும் கிறிஸ்துவின் மீதும் நெருக்கமான உறவு, பல துன்பங்களுக்கு என்னை வழிவகுத்தது. என் உள்ளத்தில் தேவ அன்பு இருந்தபடியால், தீமையும் விரோதங்களும் என்னை பாதிக்க முடியவில்லை. இரகசியம் என்னவென்றால் “மனுஷீகப் பிரகாரமாய் தனித்து கைவிடப்பட்டவள்” என தோன்றினாலும், தேவனுடைய பார்வையில் “அவரோடு இசைந்த தேவனின் அரவணைப்பில் நான் பாக்கியம் பெற்றிருந்தேன்” என்பதே அந்த இரகசியமாகும்!

> “
> **பாவம் நிறைந்த என் நாட்களில், பரிசுத்தத்திற்கு மேல் பரிசுத்தம் நான் சுதந்தரிப்பதற்கு, நான் தேவன்மீது கொண்டிருந்த இந்த நெருக்கமான ஐக்கியமே காரணம் எனக் கூறுவேன்!**

தேவனோடு கொண்டிருக்கும் “உறவாடும் மகிழ்ச்சி” இந்த உலகில் நான் சந்தித்த எந்த துன்பத்திற்கும் இணையானதல்ல! இயேசுவின் இறுதிப் பாடுகளாக கல்வாரி சிலுவை இருந்ததுபோல், நானும் என் ஒரே மகளிடமிருந்து பிரிக்கப்பட்டு, முகாந்திரம் ஏதுமின்றி சிறையின் தனிமையில் அடைக்கப்பட்டேன்! ‘இயேசுவின் நேசத்திற்காக’ நான் அடைந்த அந்த சிறையிலும் தேவன் என்னோடு இருந்தபடியால், அந்த சிறைக்கம்பிகளைத் தாண்டி என் ஆத்துமா உயர உயரப் பறந்து ‘தேவனோடு இணைந்து மகிழ்ச்சி கொண்டாடியதுதான்’ என்னுடைய சாட்சி! சிறைக்கம்பிகளின் அறையில்தான், நான் தேவனோடு கொண்டிருந்த இனிய அனுபவங்களை எழுதும்படிச் செய்து, பல்லாயிர மக்களை “கர்த்தருடைய உறவுக்குள்” பிரவேசித்திட நடத்தினார்!

ஒரு மனிதனிடம் தேவன் இடைப்படும் கிரியையை அறிந்திருக்கிறேன்! நாம் எதையெல்லாம் ‘மனுஷீக உறுதியில்’ அணைத்து வைத்திருக்கிறோமோ, அவைகளை உடைப்பதுதான் தேவனுடைய கிரியையாயிருக்கிறது!

> “
> **அவருடைய செயலுக்குத் தன்னை மனப்பூர்வமாய் ஒப்புவித்து, அவரால் “தானும் தன் சுய கிரியைகளும்” உடைத்து தகர்க்கப்பட மனப்பூர்வமான ஆயத்தமானவர்களிடம் மாத்திரமே, கிறிஸ்து தம்முடைய ஆலயத்தைக் கட்டுகிறார்!**

*மனுஷீக வலிமைக்கு கைக்கொடுத்து, மனுஷீக திறமையினால் கட்டப்பட்டவைகளை, முற்றிலுமாய் அவர் உடைப்பார்! சகலமும் உடைந்து சின்னா பின்னமாய் மாறிய அந்த இடத்தில்தான்.... கிறிஸ்து* **தனது அழகுள்ள புதிய மாளிகையை,** *தம்முடைய வல்லமையைக் கொண்டு கட்டுவதற்குத் துவங்குவார்! நம் தனிப்பட்ட ஜீவியமானாலும், குடும்ப ஜீவியமானாலும், சபை கட்டப்படும் ஊழியமானாலும் "இதுவே மாறாத நியமனமாய்" உள்ளது!*

*- மேடம் குயான்*

---

## 'கவலைப்படும் ஆரம்பத்தையே' தடை செய்தார் இயேசு!

*கர்த்தர் மீது அசைவில்லாத நம்பிக்கை வேண்டும்*

மனக்கவலை, தேவனுடைய வல்லமையையும் அவருடைய அன்பையும் சந்தேகிக்கும் கொடிய தீமையாகும். கவலை- WORRY என்ற ஆங்கில வார்த்தையின் மூல அர்த்தம் 'WYRGAN' என்பதாகும். அதன் பொருள் என்னவென்றால் "தொண்டையை நெறித்துக் கொல்வது" என்பதாகும்! அது உண்மைதான், ஒரு மனுஷனுக்குள் கவலை நுழையும்போது அவனுடைய உணர்வுகளின் மொத்த ரூபமாய் இருக்கும் 'மனதை' நெறிக்கத் துவங்குகிறது. இந்நிலையில் இருக்கும் ஒருவன் "பயங்கர தாக்குதல்" அடைந்தவனாயிருக்கிறான். இயேசு அன்று யாரிடம் கவலையைப் பற்றி பேசி எச்சரித்தாரோ, அந்த நபர்களை விட நாம் எந்த விதத்திலும் வித்தியாசமானவர்கள் அல்ல! அவர்கள் "என்னதை புசிப்போம், என்னத்தை குடிப்போம், என்னத்தை உடுப்போம்" என கவலைப்பட்டார்கள். அதை வைத்து, இப்போது நாம் அடைந்திருக்கும் கவலையை ஒப்பிட்டு நியாயப்படுத்த முடியும்: "பரவாயில்லை, நான் என்ன ஆடம்பர வாழ்விற்குரிய காரியங்களுக்காகவா கவலைப்படுகிறேன்?

> **"என் அடிப்படை தேவைகளுக்காகதானே கவலைப்பட்டேன் என்றே அநேகர் எண்ணிக்கொள்கிறார்கள். ஆனால், நீங்கள் எண்ணிக்கொண்ட 'அந்த அடிப்படை தேவைகளுக்காக' கவலைப்படுவதும் ஒரு கிறிஸ்தவனுக்கு தடை செய்யப்பட்டுள்ளது!**

நீங்கள் வேத வாக்கியங்களை கவனித்து வாசிப்பவரா யிருந்தால், "தம்முடைய பிள்ளைகள் தேவனைக்குறித்த சிந்தையில் நிறைந்திருக்கவே கர்த்தர் விரும்புகிறார்" என்ற பாடத்தை கற்றுக் கொண்டிருக்க முடியும். அதற்கு இடையூறாய், நீங்கள் எண்ணிக்கொண்ட அத்தியாவசியமான, நிரந்தரமில்லாமல் கடந்து

*போகும் இந்த உலகத்தில் உள்ள யாதொன்றிற்கும் நீங்கள் கவலைப்பட தேவன் விரும்புவதில்லை. எனவேதான் "இந்த பூமிக்குரிய யாதொன்றின் மீதும் உங்கள் மனதை பதித்து வைத்திடாமல்,* **மேலானவைகள் மீதே,** *மன விருப்பத்தை வைத்திடுங்கள்!" என, கொலோசெயர்3:2 வசனங்களில் தேவன் கூறினார். 'மேலான இந்த வாழ்க்கை' நமக்கு கைக்கூடுவதற்காகவே "வாழ்க்கையின் இந்த அடிப்படை தேவைகளுக்காக கவலைப்படாதிருங்கள்! இந்த பூமியில் உள்ள யாதொன்றைக் குறித்த தேவைகளை,* **நானே உங்களுக்குத் தருவேன்**" *என வாக்குரைத்துள்ளார். ஆவிக்குரிய ஜீவியத்தின் அடிப்படை மாறாத அடையாளம் என்னவென்றால் 'நாம் இந்த பூமிக்குரியவர்கள் அல்ல' என்பதுதான். நம்முடைய பரலோக பிதாவை முற்றிலுமாக நம்பி வாழ்ந்தால், கவலை நம் ஜீவியத்தை விட்டு விலகி ஓடிவிடும்! மிகுந்த விசுவாசத்துடன் நாம் எவ்வளவு அதிகமாய் கர்த்தரை அறிந்திருக்கிறோமோ, அவ்வளவு அதிகமாய் நாம் அவரை நம்பி வாழ்ந்திடுவோம்!*

*திரளான ஐசுவரியவான்கள், தங்கள் தேவைகளைக் குறித்தே அதிகமாய் கவலைப்படுகிறார்கள்! அதனிமித்தமே தங்கள் எதிர்காலத்தின் பாதுகாப்பாக தங்கள் ஐசுவரியங்களை 'ஒரு வேலியாக' வைத்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். ஏழை ஜனங்களும் தங்கள் அத்தியாவசிய தேவைகளுக்காக கவலைப்படுகிறார்கள்! ஆகிலும், அவர்களுக்கோ சேர்த்துவைத்திட ஐசுவரியம் இருப்பதில்லை.*

> **"தங்கள் பாதுகாப்புக்காக சேர்த்துவைக்க நாடும் விருப்பத்தில் "விசுவாசத்திலிருந்தும் தேவனை நம்புவதிலிருந்தும் நம்மை விலக்கி வைத்திட சம்பவிக்கும் அபாயமே நிறைந்திருக்கிறது!". இதுபோன்ற பெரிய தவறு, ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் உண்டு!**

***வி****சுவாசியாகிய ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாக தன் வீட்டாரையும் விசாரித்திட வேண்டும், என்றே கட்டளையிடப்பட்டு இருக்கிறது (1தீமோ.5:8). ஆகவேதான், வேத வாக்கியங்கள், நாம் ஒரு சேமிப்பு கணக்கு வைத்துக்கொள்வதற்கோ அல்லது இன்சூரன்ஸ் வைத்துக்கொள்வதற்கோ தடை செய்யவில்லை! அவைகள், தேவன் மீது நம்பிக்கையை குறைத்து விடும் எனவும் சுட்டிக்காட்டவில்லை! குடும்பத்திற்காக ஓர் ஞானமுள்ள திட்டம் வகுப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இவை யாவையும் நீங்கள் பெற்று வைத்திருந்தாலும், இன்னமும் உங்கள் எதிர்காலத்தைக் குறித்து அஞ்சுகிறீர்கள்*

*அல்லவா? ஆகவேதான், எல்லோரையும் பார்த்து ஆண்டவர் கூறுவது என்னவென்றால்: 'கவலைப்படாதிருங்கள்!' என்றே யாவருக்கும் கட்டளையிடுகிறார்!*

ஏனெனில், நம் எல்லா தேவைகளையும் அவர் தருவதாகவே வாக்களித்திருக்கிறார். தான் கொடுத்த வாக்குபடியே அதை நிறைவேற்றுவார், 'என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவை எல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்' என்றே மாறாத வாக்குதத்தம் அளித்திருக்கிறார் (பிலி.4:19). இது, அவர் நம்மீது கொண்ட கரிசனையாகும்! உங்களுக்குரிய கவலை அல்ல.

*- ஜான் மேக்ஆர்தர்*

---

## பாவிகள் மத்தியில் "மாசற்றவராய்" வாழ்ந்த இயேசு!

*மண்ணில் பிரகாசித்த அவர், நம்மையும் பிரகாசிப்பார்*

**பா**விகளாகிய நம்மிடத்தில் வந்தபோதிலும், "ஜீவ ஒளியாய்" பிரகாசித்த இயேசுவை நோக்கிப் பாருங்கள்! எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும் என்று அவர் நமக்கு ஜெபம் கற்பித்தாரேயன்றி, அவர் அப்படி ஜெபிக்க அவசியமில்லை. ஏனெனில், நம்மிடையே அவர் குற்றமற்றவராய் வாழ்ந்தார்! அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தாரென்பது மெய், ஆகிலும் எந்த விஷயத்திலும் அவர் தவறினவரல்ல :

*பசியாயிருந்தார், முறுமுறுக்கவில்லை!*

*தாகத்தோடிருந்தார், எரிச்சலடையவில்லை!*

*களைத்துப் போயிருந்தார், வெடு வெடுப்பாய் பேசவில்லை!*

*கலியாண வீட்டிலிருந்தார், வீண் சல்லாபம் செய்யவில்லை!*

*சாவு வீட்டுக்குப் போனார், மாரடித்துப் புலம்பவில்லை!*

*சத்துருக்கள் இடைவிடாது தொந்தரவு கொடுத்தார்கள்....*

*கோபித்துக்கொள்ளவில்லை!*

*அநேகர் அவரை அறியாமல் நடந்துகொண்டார்கள்....*

*அவர்களை மனம் நோகப் பேசவில்லை!*

*பாவிகளோடு போஜனம்பண்ணினார்.....*

*அவர்களால் தீட்டுப்படவில்லை!*

*முகஸ்துதி அவரை மயக்கவில்லை!*

*பயமுறுத்தல் அவரை கலங்கச் செய்யவில்லை!*

*மனுஷரின் நிந்தையும் இகழ்ச்சியுமான வார்த்தைகள்.....*

*அவரை அதைரியப்படுத்தவில்லை!*

*எல்லாமே அவருக்கு விரோதமாய் நேரிட்டன,*

*ஒன்றும் அவரை மேற்கொள்ளவில்லை!*

"

**இவ்வாறு, இடுக்கண்களில் அவருடைய ஆத்துமா பிழைத்ததுமன்றி, அவருடைய ஊழிய முயற்சிகள் தடையில்லாமல் வளர்ந்தோங்கின!**

*அவரிடமிருந்து வல்லமை புறப்பட்டு அநேகரைக் குணமாக்கிற்று! மனுஷருடைய ஆவியையும் சரீரத்தையும் ஆண்டுகொண்டிருந்த பிணிகளை நீக்கி ஆவிக்குரிய ஆசீர்வாதத்தோடு அனுப்பினார்!*

*அவரில் பாவமிருந்தால்:*

*அவருடைய பேச்சுக்கும் கிரியைகளுக்கும் வல்லமையேது?*

*சப்பாணி நடப்பதெப்படி?*

*செத்தவன் பிழைப்பதெப்படி?*

*காற்றும் கடலும் அடங்குவதெப்படி?*

*இவ்வாறு எப்பொழுதும், எல்லாவிடங்களிலும், எல்லார் நடுவிலும், நீதியும் பரிசுத்தமும், அன்பும் கிருபையும், அமைதியும் சாந்தமும், இரக்க உருக்கமும் நிறைந்த, காருண்ய புருஷனாக அசையாத மன்னனாக, விலகாத வீரனாக, வழுவாத சுத்தனாக, மாசற்ற ஜோதியாக, சிலுவை வரை சிறந்து விளங்கினார், எம்பெருமான் இயேசு!*

"

**அவரைக் குற்றப்படுத்த வேண்டுமென்று, இடைவிடாமல் தம்மைத் தொடர்ந்து வந்தவர்களைப் பார்த்து: என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்? என, பகிரங்கமாய் கேட்டார்! ஒருவராவது வாய் திறக்கவில்லை! அவர் உள்ளும் புறம்பும் ஒன்று போலிருந்தார்! இருதய உணர்வின்படியே பேசினார். அவருடைய நல்ல இருதயத்திலிருந்து நன்மைகளே புறப்பட்டன!**

*அவர் பாவிகள்மீது அனுதாபமுள்ளவராயிருந்தும் பாவத்தைக் கண்சாடையாய் விட்டவரல்ல. யூதர்களுடைய பாவங்களைத் தைரியமாக எடுத்துப் பேசினார். நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்றார். தமது சீஷர்களையும் தப்பவிட்டவரல்ல. அவர்களிடத்தில் தப்பிதங்களைக் கண்டபோது, உடனே கண்டித்திருக்கிறார். பேதுருவை 'எனக்குப் பின்னாகப்போ சாத்தானே' என்றார்! யாக்கோபு யோவானின் 'பழிவாங்கும்*

*சுபாவத்தை' கடிந்து கொண்டார்! அதிகாரிகளான* **வேதபாரகர் பரிசேயரின் 'மாய்மாலத்தை' அஞ்சாது எதிர்த்தார்!** *ஆசாரிமார் இடங்கொடுத்த ஆலய வியாபாரத்தை பக்தி வைராக்கியத்தோடு அகற்றினார்!*

அவரைப் 'பாவிகளுக்குச் சிநேகிதன்' என்று குற்றப்படுத்திப் பேசினார்கள். நெருப்பை, ஒரு புழு பற்றிக்கொண்டு நெருப்பை தீட்டுப்படுத்த முடியுமோ? அவ்வாறாகவே இயேசு 'நெருப்பாய்' இருந்தார்! அதேசமயம், அவர் தொட்டவுடன் குஷ்டரோகம் பறந்ததேயன்றி, அவர் தீட்டுப்படவில்லை! **ஆம், அவர் சமுகத்தில் பாவம் பறந்ததேயன்றி, பாவம் அவரைப் பற்றவில்லை!**

இந்த பாவ நாச உலகில் 'மாசற்ற வாழ்க்கையை' நாமும் இயேசுவைப் போலவே கறைபடாது வாழவேண்டும், என்றே நம் எல்லோரைக் குறித்தும் தேவன் விரும்புகிறார்! மிகுந்த தாகம் கொண்டு, ஜீவன் தரும் **இந்த நல்ல மேய்ப்பனை பின்பற்றி வரும் யாவருக்கும் 'பழுதற்ற வாழ்க்கை வாழ்ந்திட'** இன்றும் அவர் நிச்சயமாய் உதவுவார்! உங்களுக்கும் உதவுவார்!

*- பரமானந்தம் ஐயர்*

---

## கர்த்தரை சந்தித்து வாழும், ஆச்சரியமான உறவு!

*அவரின்றி, நமக்கு ஜீவியமாற்றமில்லை*

**நா**ம் அனைவருமே ஆச்சரியப்படக்கூடிய உண்மை என்னவென்றால், முற்றிலும் பாவம் நிறைந்த மானிடர்களாகிய நம்மோடு, "மகிமையான தேவன்" தொடர்புகொள்ள விரும்புகிறார்! என்பதே ஆகும். சங்கீதம் 17:3-ம் வசனத்தில் "கர்த்தாவே இரவு நேரத்திலும் என் இருதயத்தை விசாரிக்க நீர் வருகிறீர்" என வியந்து, 'மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்" என பரவசமடைந்தார்! (சங்.8:4). தெய்வம் நம்மை சந்திக்கும் நிகழ்ச்சி, பெருமகிழ்ச்சியான பொக்கிஷமாய் சேர்த்து வைக்கப்பட வேண்டிய ஒன்றாகும். *தாவீது* தேவனோடு கொண்டிருந்த உறவை, மிகுந்த பக்தியோடு கூறினார்! அவர், தான் கண்டடைந்த பெருமகிழ்ச்சியான இந்த அனுபவங்களை 'கர்த்தருக்குச் சொந்தமான' யாவரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற வாஞ்சையைப் பெற்றிருந்தார். பிரியமானவர்களே, கர்த்தர் உங்களை சந்தித்திருந்தால், நீங்களும்:

1. *அதைக்குறித்த ஆச்சரியத்தில் நிலைத்திருங்கள்!*

2. அதை உங்கள் ஞாபகத்தில் வைத்திருங்கள்!
3. அந்த மகிழ்ச்சியான நிகழ்ச்சியை, உங்கள் நண்பர்களிடத்தில் பகிர்ந்து கொள்ளுங்கள்!
4. கர்த்தர் உங்களை சந்தித்த நிகழ்ச்சியை, உங்கள் ஜீவியத்தின் முக்கிய நிகழ்ச்சியாய், உங்கள் நாட்குறிப்பு புத்தகத்தில் எழுதி வையுங்கள்!
5. எல்லாவற்றிற்கும் மேலாக, நன்றி நிறைந்த இருதயத்தோடும் 'கர்த்தவே' இந்த ராத்திரியிலே நீர் என்னை சந்தித்தீர் அல்லவோ? என கூறி மகிழ்ந்திருங்கள்!
6. இவ்வாறு கர்த்தர் உங்களை சந்தித்த அவருடைய தயவு 'கர்த்தரை ஆராதித்த' நினைவாக எப்பொழுதும் வைத்திருங்கள்!

ஆண்டவர் நம்முடைய இருதயத்திற்கு அருகில் வந்து விட்டால் நம் ஆத்துமா நடுங்கி விடும்! அந்த நடுங்கும் ஆத்துமா "அருகில் வந்த ஆண்டவர், நிச்சயம் என்னை சோதித்தறிவார்" என்ற எண்ணத்தை பெற்றிருக்கும். இதுபோன்ற சமயத்தில், யோபு தன் ஆண்டவருக்கு எவ்வாறு பதில் கூறினார் என்பதை மறவாதீர்கள்: "என் காதினால் உம்மை குறித்துக் கேள்விப்பட்டேன்; **இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது.** ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலுமிருந்து மனஸ்தாபப்படுகிறேன்" என்று கூறினார் (யோபு.42:5,6).

**" நாம் தேவனைக் குறித்து வாசிக்கலாம்! தேவனைக் குறித்துக் கேட்கலாம்! அப்படியிருந்தும் யாதொரு மாற்றமும் நமக்குள் ஏற்படாமலே இருக்கலாம். ஆனால் "அவருடைய சமூகத்தை நாம் உணரும்போது" அது முற்றிலும் வேறொரு அனுபவமாகும்! அவருடைய பிரசன்னத்தில் சகலமும் மாறுதலடையும்!**

நான் ஒருசமயம், என்னுடைய வீட்டில் 'ராஜாக்கள் கூட' வந்து தங்கிட முடியும் என்ற எண்ணம் கொண்டிருந்தேன். ஆனால் 'ராஜாதி ராஜா'வாகிய ஆண்டவர் என் வீட்டிற்குள் வந்தபோதோ, அவருக்கு என் வீடு தகுதியில்லாததைப்போல் உணர்ந்தேன். இதைப்போலவே நான் தேவனை பூரண பரிசுத்தராய் கண்டு உணராத பட்சத்தில் "**பாவம் எனக்கு மிகுந்த பாவமாய்**" உணர்ந்திட முடியாது (ரோமர்7:13). தேவனுடைய பரிசுத்த சுபாவத்தை நான் நேரடியாக உணர்ந்து அறியாத பட்சத்தில், என் சொந்த கேடான சுபாவத்தை நான் விளங்கிக் கொள்ளவே முடியாது!

நாம் யாராயிருந்தாலும் "அவரைக் கண்ட மாத்திரத்தில்,

*செத்தவனைப் போல அவருடைய பாதத்தில் விழுவதைத் தவிர" வேறு வழி இல்லை (வெளி.1:17). 'அதுவரைக்கும்' நம்முடைய அகந்தையான மாயமே நிறைவாய் நம்மை ஆட்கொண்டிருக்கும்! "மனுஷ கை விரல்கள் தோன்றி, ராஜ அரண்மனையின் சுவற்றில் எழுதியபோது...." அதைக் கண்ட பெல்ஷாத்சார் ராஜாவின் முழங்கால்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டது!" (தானி.5:5,6).* **கர்த்தரை நாம் காண்பது, அப்படியொரு தெய்வபயம் நம் ஆவியை சலனப்படுத்தும்!** *அவரின் ஒளி பிரகாசத்தில், நம் அருவருப்பைக் கண்டு, வெட்கத்தால் நிறைந்து, முகங்குப்புற விழுகிறோம். நம்மீது ஒட்டியுள்ள கறைகளும், சுருக்கங்களும் (திறைகளும்) கண்டு நம்மை அருவருக்கிறோம். இப்போது நாமும் தானியேல் கூறியதைப்போலவே "நான் தனித்து விடப்பட்டு அந்தப் பெரிய தரிசனத்தைக் கண்டேன். என் பெலனெல்லாம் போயிற்று! என் அருவருப்பைக் கண்டு திடனற்றுப் போனேன்" என்றே கூறுவோம் (தானி.10:8). கர்த்தர் நம்மை சந்தித்து விட்டால், நம்முடைய 'ஒன்றுமில்லாமையை' கண்ணுற்று "கர்த்தாவே, மனுஷன் எம்மாத்திரம்?" என்றே கூறுவோம்! (சங்.8:4).*

*தேவன் என்னை முதலாவதாக சந்தித்தபோது நடந்த மாற்றத்தை என்னால் மறக்க முடிவதில்லை! பாவத்தின் அறியாமையில் மூழ்கி இருந்த என்னை 'அந்த இரவில்' தேவன் என்னை முதல் முறையாக சந்தித்தார். அந்த சந்திப்பு தர்சு பட்டணத்து சவுலை தேவன் முதன் முதலாக சந்தித்ததற்கு ஒப்பாயிருந்தது:*

> "
> என்னுடைய அகங்கார குதிரையில் சென்று கொண்டிருந்த என்னை தரையில் விழும்படிச் செய்தார்.....

*அவரது ஆவியின் கண் கூசும் வெளிச்சத்தில் 'என் குருட்டுத் தன்மையை' உணர்ந்தவனாய் "ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்? (அப்.9:6). நானோ, இதுநாள்வரை கர்த்தருக்கு முரட்டாட்டம் செய்து, என்னால் முடிந்த அனைத்து தீமைகளையும் ஒளிப்பிடத்தில் செய்து* **முள்ளில் உதைத்து** *வாழ்ந்திருக்கிறேன்" (வச.5). என, என் கேடான ஜீவியத்தை அவருடைய பிரசன்னத்தில் உணர்ந்தேன். என் ஆத்துமாவோ, சொல்லிமுடியா வேதனையில் தத்தளித்தது.*

> "
> என்னைச் சந்தித்த இயேசுவின் கண்கள் என்னை ஆழமாய் துருவி ஆராய்ந்ததைப் பார்த்தேன். என்னில் மறைந்திருந்த துன்மார்க்கங்களையெல்லாம் வெளிச்சத்தில் கொண்டு வந்தார்! நான் தூரச் சென்று மனங்கசந்து அழுதேன்!

*கர்த்தர் ஆதாமை அழைத்த போது, சர்வ வல்லவரின் முகத்திற்கு முன்பாக 'நிர்வாண தோரணையில்' இருந்தான். அதுபோலவே நான் கர்த்தருக்கு முன்பாக என் சுயநீதி அனைத்தையும் உரிந்து போட்டவனாய் நின்றேன். கர்த்தரோ நம் 'முதல் பெற்றோரை' மிருகத்தின் தோலினால் உடுத்தினதைப்போலவே, என்னையும் தமது மிகப்பெரிய தியாகத்தால்* **நீதியின் வஸ்திரம் கொண்டு** *என்னை உடுத்துவித்தார். அந்த இரவில் கர்த்தரைப் பாடி மகிழும் 'புதுப்பாடல்' என் நாவில் உதித்தது!*

> ***பி****ரியமானோரே, இந்த நிகழ்ச்சி ஒரு நாள் அல்ல, நரைமுடி நிறைந்த போதகனாயிருக்கும் நான், இன்றுவரை அவரைச் சந்திக்கும் நிரந்தர நிகழ்ச்சியாயிருக்கிறது. அவர் வருவார்! நான் அவரை தரிசிப்பேன்! முகங்குப்புற விழுவேன்! என் சுயநீதி முற்றிலும் அகற்றி, தேவ நீதியால் உடுத்துவார்! அவரை துதிக்கும் புதிய பாடலை என் நாவில் தருவார்! ஆ, இந்த பூமியிலேயே அவருடைய பிரசன்னத்தில் வாழும் இந்த ஒப்பற்ற ஜீவியம் எனக்குண்டானது போலவே, உங்கள் யாவருக்கும் தேவன் அருள் செய்வாராக!*
>
> *- சார்லஸ் ஸ்பர்ஜன்*

---

## அழைக்கப்பட்ட ஊழியர்களை, 'வரம் தந்து' ஆதரிக்கும் கர்த்தர்!

*தன் தாசர்களை, இயேசுவை நேசித்ததுபோல் நேசிக்கும் பிதா*

**ந**ற்செய்தி பேராணையோடு, ஊழிய வரங்களையும் இணைத்து கட்டளையிட்டார் நமது ஆண்டவர் இயேசு! (மாற்கு 16:15,17,18). தனது மிஷனெரி பயணங்களில் எவ்வாறு தேவன் "அற்புத அடையாளங்களை" நிகழ்த்தினார் என்று பவுல் எழுதினார் (ரோமர் 15:18,19). தொலைந்துபோனோருக்கு நன்மை செய்ய இயேசு புறப்பட்டுச் சென்றபோது ஆவியின் அபிஷேகம், இயேசுவின் மூலம் சுகமளித்தலிலும், நொறுங்குண்டோர் காயங்களை கட்டுவதிலும் வெளிப்பட்டது (அப்.10:38).

> **" உங்களது வாஞ்சையும், சந்திக்கப்படாதோரைச் சந்திப்பதில் இருக்குமானால், அப்போஸ்தலர்கள் பெற்ற அதே வரங்களை உங்கள் ஊழியத்திலும் நீங்கள் நிச்சயமாய் எதிர்பார்க்கலாம்!**

*ஊழிய வரங்களில் அனேக பகுதிகளை இயேசு கற்பித்தார்! உதாரணமாக, "உண்மையுள்ள ஒரு தேவ ஊழியருக்கு" நீங்கள் ஓர் உதவியாளராய் இருப்பதில் நீங்கள் சிறந்து விளங்கலாம். 1கொரிந்தியர் 12:28லுள்ள வரங்களின் பட்டியலில் குணமாக்கும் வரங்களுக்கடுத்து, உடனே "உதவிகள்" என்ற வரம் கொடுக்கப்பட்டுள்ளது! இன்று அதிகம்*

*தேவையான, ஆனால் அதிகம் விரும்பப்படாத வரங்களில் இது ஒன்று! இயேசு சபைக்கு அருளிய ஐந்துவித ஊழிய வரத்தில் நீங்கள் ஈடுபாடு கொண்டிருந்தாலும், உத்தம உதவியாளரின்றி எந்த தலைவனும், பிரசங்கியும் தனது பணியை நிறைவேற்ற முடியாது! இவர்கள்தான் மேடைப் பகட்டை விரும்பாது,* **மறைவில் நின்றுகொண்டு** *தேவன் வெளியுலகில் பயன்படுத்தும் தாசருக்கு உதவியாயிருப்பார்கள். இவர்களையே மாலை சூடா மாணிக்கங்கள் என ஒரு பரிசுத்தவான் வர்ணித்தார்!*

*"நீங்கள் நன்றாய் செய்யக்கூடிய ஊழியப் பகுதியில்" உங்களை முழுவதுமாய் ஊற்றிவிடும்போது அதில் வளருவதைக் காண்பீர்கள்! "உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப் பற்றி அசதியாயிராதே. நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக் கொண்டு,* **இவைகளிலே நிலைத்திரு**" *(1தீமோ.4:14,15).*

> **"அவர்களுக்குத் தரப்பட்ட கொஞ்சத்தில் உத்தமமாயிருப்பவர்களைத் தேவன் உயர்த்துவார் (மத்.25:21).**

*ஆகவே, உங்கள் கரங்களில் தேவன் ஒப்படைத்திருக்கும் வேலைக்கு உங்களை முற்றும் கொடுத்துவிடுங்கள். "அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்;" (ரோமர் 12:11). அப்பொழுது உங்களுக்கு தேவையான ஊழிய வரங்கள் தானாகவே வெளிப்படும்!*

> ***மி**ஷனெரிகளாகப் புறப்பட்டுச் செல்வோர் பலவிதமான வரங்கள் தங்களுக்கருளப்படுவதைக் காண்கின்றனர். விசுவாச வரமானது, அவர்கள் வசதிகளைத் தியாகம் பண்ணி, வாழ்வைப் பணயம் வைத்து, களங்களுக்குப் புறப்பட்டுச் சென்று, பின்னிட்டு திரும்பி வராதபடி, தங்கள் அழைப்பில் நிலைநிற்கச் செய்திருக்கிறது (எபி.11:8,17,15). குழப்பமான கலாச்சார சூழலில் நற்செய்தியை விளக்கும்போது எழும் விநோதப் பிரச்சனைகளைத் தீர்க்க, அறிவு வசன வரம் உதவும். புறவினத்தாரிடையே மிஷனெரிப்பணி செய்த போது, உருவாகியதோர் பிரச்சனையைத் தீர்க்க இந்த வரத்தை அப்போஸ்தலன் யாக்கோபு வெளிப்படுத்தினான் (அப்போஸ்தலர்.15:13-22). தன் கையைக் கவ்விக்கொண்ட விரியனை அலட்சியமாய் பவுல் உதறியெறிந்தான் (அப்போஸ்தலர்.28:3-5). இது தன்னை விசுவாசித்து பணித்தளம் வந்தவர்களுக்கு தேவன் செய்திடும் அனுகூலத்தின் நிறைவேறுதலாம் (மாற்கு 16:18). விஷப் பூச்சிகளிலிருந்து அற்புதமாய் தப்பியதைக்*

*குறித்த சாட்சிகள் காடு மலைகளில் பணியாற்றும் மிஷனெரிகளுக்கு ஏராளம் உண்டு! பணிக்களங்களில் குடிநீர் வசதி மிகவும் குறைவு. எல்லாவிதத் தண்ணீரையும் மிஷனெரிகள் குடிக்க வேண்டிய நிலையுண்டு. அவர்கள் மாற்கு 16:18ஐ உரிமைப்பாராட்டிப் பத்திரமாயிருக்கிறார்கள். இவ்வாறு தன் அழைப்பு பெற்று கர்த்தருக்கு உத்தம ஊழியம் செய்திடும் 'தம் ஜனத்தை' கர்த்தர் தம் உத்தமத்தினால் தன் 'ஆவிக்குரிய வரங்களைப் பொழிந்து' அவர்களை பாதுகாக்கும் செயல்,* **ஒரு தாயின் அன்பிலும் மேலானது!**

*- R.ஸ்டான்லி BYM*

---

## அவன், தேவனை அறிந்து வாழும் புனிதன்!

*தேவனுக்காக 'தனித்திருக்கவும்' அஞ்சாதவன்*

ஒரு உண்மையான ஆவிக்குரிய மனிதன், புனிதனாகவும்! வினோதனாகவும்! இருப்பான். அவன் தனக்காக வாழ்ந்து விடாமல், பிறரும் தன் போன்று புனித வாழ்க்கை வாழ வாஞ்சை கொண்டிருப்பான். அவன் ஜனங்களைக் கண்டு "உங்கள் முழுமையும் கர்த்தருக்கு அர்ப்பணியுங்கள்" என கேட்பானேயல்லாமல், தனக்கென சிறிது பங்கு கூட கேட்டிடமாட்டான்!

> **"மனுஷர்களுக்கு முன்பாக தன் இரட்சகர் மகிமைப்பட தவித்திருப்பான் அல்லாமல், தான் கனம் பெறுவதை ஒருபோதும் விரும்பமாட்டான். தன் கர்த்தர் உயர்த்தப்பட்டு, தான் புறக்கணிக்கப்பட்டால், அதில் மகிழ்ச்சி காண்பான்!**

இவனது மேன்மையான உயர்ந்த ஆர்வத்தில் பங்குகொண்டு பேசிக்கொள்ள, வெகுசிலரையே இவன் காண்கிறபடியால், இந்த இரைச்சலான மார்க்க சப்தங்களுக்கு இடையில் 'மௌனமாகவே' இவன் காணப்படுவான். இதனிமித்தம், 'கிறிஸ்தவ சமுதாயத்திற்கும்' இவனுக்கும் இடையிலான தூரம் பெரிதாகிக் கொண்டே வருமேயல்லாமல்.... நெருங்கி வருவதில்லை. "யாருடைய வஸ்திரத்தில், கர்த்தர் மகிழும் வெள்ளைப்போளம், சந்தனம், லவங்கம் ஆகிய இவைகளின் வாசனை வீசுகிறது?" என்றே இவன் தனக்கு நண்பர்களைத் தேடுவான்(சங்.45:8). அந்த வாசனை கொண்ட ஒரு சிலரைக் கண்டு மகிழுவான்.... அந்த சுகந்தம், ஒருவரிடமும் இல்லையென்றால், அந்த மரியாளை போன்று, 'தெய்வ அனலை' தன் இருதயத்தில் வைத்து காத்துக்கொள்வான்!

இப்படியெல்லாம் தனிமைப்படும் அந்த புனிதன் "தகப்பனும்

*தாயும் என்னை கைவிட்டாலும் கர்த்தர் என்னை சேர்த்து அணைப்பார்" என்று கூறிய சங்கீதக்காரனைப் போல, தன்னையே முற்றிலும் தேவனுடைய மார்பில் சாய்ந்து விடுவான்.*

> "ஒரு கூட்டத்தில் கற்றுக்கொள்ள முடியாதவைகளை, கர்த்தரோடு கொண்ட தனிமையில் கற்றுக்கொள்வான்! அவரே அவனுக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமாயிருப்பார்!(1கொரி.1:30). இவ்வாறு கிறிஸ்துவே அவனுக்கு எல்லாவற்றுக்கும் எல்லாமுமாயிருப்பார்!

*இவன் யாரோடும் பழக மறுக்கும் புனிதன் அல்ல! மனுவர்க்கத்தின் பாடுகளுக்கு தன் இருதயத்தை கடினப்படுத்திக் கொண்டு, பாராமுகமாய் பரலோகத்தை அண்ணார்ந்து பார்ப்பவனும் அல்ல! இதற்கு நேர்மாறாக, தேவனோடு தனிமைப்படுத்தப்பட்ட இந்த புனிதன், மிகுந்த இரக்கம் உள்ளவனும், பாவத்தால் காயப் பட்டவர்களைத் தேற்றி ஆற்றுபவனுமாயிருப்பான். அவனுடைய ஜெப வேளையில் "ஒரு ஏழை விதவையின் பசியை உணர்ந்தால்" ஜெபத்தை நிறுத்தி, அந்த ஏழைக்கு உதவிய பிறகு, தன் ஜெபத்தை மீண்டும் தொடர்ந்திடுவான், மெய்யாகவே அவன் புனிதன்!*

*- A.W.டோசர்*

---

## 'தங்கள் ஜீவனை' அருமையாய் எண்ணாத தாசர்கள் வேண்டும்!

*யோவான் ஸ்நானகனின் தைரியம் கண்டு, இயேசு மகிழ்ந்தார்*

*'யோவான் ஸ்நானகன்' பெயரைக் கேட்டாலே, உடல் சிலிர்க்கும்! மயிர் கூச்செரியும்! அத்தனை தீவிரம் கொண்ட தெய்வ பக்தன் அவன்! கிறிஸ்து பிறக்கும் சில மாதங்களுக்கு முன் பிறந்த இந்த யோவான் ஸ்நானகன், "கர்த்தருக்கு வழியை ஆயத்தம் செய்திடும்" தாழ்மை ஊழியராய் தோன்றினார்! (மத்.3:3). அவரது சொற்பகால ஊழியத்தில் பாவத்தை எந்த ரூபத்திலும் ஒளித்துக்கொள்ள விட்டதில்லை!* **ஒரு தேசாதிபதியின் குற்றத்தையும் மகா தைரியத்தோடு சுட்டிக்காட்ட தயங்காத தீரன் அவன்!**

*வீதிகளில் அவர் நடந்து வருவதை கேள்விப்பட்டால், பாவிகள் பதுங்கி ஒளிந்து கொள்வர்! இது அவரது விசுவாச தைரியத்தின் சாரமே அன்றி, அவரது முழக்கத்தில் "மனந்திரும்பச் செய்யும்"* **வனாந்திரத்தில் ஒலிக்கும் சத்தமாகவே,** *ஜனங்களை அவர் பக்கமாய் பரிவோடு ஈர்த்துக்கொண்டது! மனந்திரும்புதலுக்கு அச்சாரமாக* **"ஒப்புரவாகுதலை" மனந்திரும்புதலுக்கேற்ற கனி கொடுங்கள்,** *என ஓங்கி*

*ஒலித்த நேர்மை ஊழியன்! (லூக்கா 3:7,8).*

> "**ஆம், ஊழியத்தில் ஈர்க்கப்பட்ட 'ஒரு கூட்டத்தை' தனக்கென, தன் இராஜ்ஜியமாக மாற்றிக்கொள்ளும், இந்த கொடிய காலத்தில், இந்த தீரனோ, "மனந்திரும்பி பரலோக இராஜ்ஜியம் வாருங்களென்றே" கர்ஜனை புரிந்தவர்! அதே செய்தியை, இயேசுவும் உறுதிப்படுத்தினார்!**

*மேசியா வருவார், வருவாரென பல்லாயிர ஆண்டுகளாய், பல்வேறு தீர்க்கதரிசிகளைக் கொண்டு சொல்லப்பட்ட பழைய ஏற்பாட்டு காலத்தின், கடைசி தீர்க்கதரிசியாய் பிறந்த அவரை "இவனே அந்த எல்லா தீர்க்கதரிசிகளிலும் பெரியவன்" என்ற புகழாரத்தை, இயேசு அவருக்கு சூட்டினார்! அது ஏனென்றால் "இவரே மேசியா" என இயேசுவை கண்ட மாத்திரத்தில் "நான் சொல்லி வந்த தேவ மைந்தன் இவர்தான்" எனவும், "மனுக்குலத்தின் பாவ நிவர்த்தியாக, பலியாகிட வந்த தேவ ஆட்டுக்குட்டி!" எனவும், இயேசு தொடுத்து வந்த* **புதிய உடன்படிக்கை சுவிசேஷத்தின்** *பாதரட்சையை அவிழ்த்து, அறிவித்திட "நான் பாத்திரன் அல்ல" எனவும், தாழ்மை தேவ ஊழியனாய் நிரூபித்தார்!*

*தன் நிறைவான 'ஆத்தும ஆதாய' ஊழியத்தில் பெற்ற அவரது சீஷர்கள், இயேசுவைப் பின்பற்ற துவங்கியதைக் கண்டு "***புதிய உடன் படிக்கையின் கோலாகலத்தை***" ரசித்து, ஆனந்த பெருமூச்சு விட்டார்!*

*கர்த்தருடைய ஊழியர் R.ஸ்டான்லி அவர்கள் இந்த யோவான் ஸ்நானகனின் ஆகாரத்தை விவரித்து 'காட்டுத்தேன்' என்ற புத்தகத்தில் கூறிய சத்தியங்கள், இன்னும் அதிக பரவசமாய் உள்ளன!*

> "**யோவான்ஸ்நானகனின் உணவு 'வெட்டுக்கிளி'. ஆம் அவரது உணவின் தன்மையைப் போலவே, அவரது வார்த்தைகள் கூர்மையாகவும், மானிடரின் "பாழ்பட்ட ஆவிக்குரிய நிலையைப்" பிரித்துக் காட்டுவதாகவும் இருந்தது!**

*மேலும் 'காட்டுத் தேன்' அவரது ஆகாரமாய் இருந்தது!* **அது, மலிவாய் கிடைக்கும் நாட்டுத் தேன் அல்ல..... ஊருக்குள் கிடைக்காத காட்டுத்தேன்!** *எனவும் உயர்த்தி காண்பித்தார்! 'ஊருக்குள்' பிரபல்யமான செழிப்பு உபதேசங்கள், 'ஜனங்களை மகிழச் செய்திடும்' ஆடல் பாடல் ஆராதனைகள்! போட்டிகள், பொறாமைகள், பிரிவினைகள் நிறைந்த.....* **எதுவும், காட்டுத்தேனை, தரம் குறைந்த 'உள்நாட்டுத் தேனாய்' மாற்றிட முடியவில்லை!** *'காட்டு புஷ்பங்களை கவனித்துப் பாருங்கள்' என்ற இயேசுவின் இந்த எளிய அழைப்புக்கு கீழ்ப்படிந்து,*

*கவலைப்படாது வாழ்ந்த அவரது சீஷர்களுக்கு இந்த சத்தியம் புரியும்! இன்று, இயேசுவை பின்தொடரும் சீஷர்களையும் பரவசமாக்கும்!*

*__இ__ந்த தீரனின் உடை, ஒட்டகமயிர்! அவரது உணவு, காட்டுத்தேன்! அவர் தங்கும் வாசமாயிருந்தது, வனாந்திரம்! ஆகிய அனைத்துமே, மனித செயற்கை வாசனையில்லாத இயற்கையானவைகள்! கர்த்தரால் போஷிக்கப்பட்டு உடுத்துவிக்கப்பட்ட 'இந்த யோவான் ஸ்நானகனை' உற்றுநோக்கிய யாவருமே, கர்த்தருக்காக எழும்பி நிற்கும் 'கவலைப்படாது வாழும் வாழ்க்கையை' பெற்று சுகிப்பார்கள். அவரது சிறைவாசம், தலை துண்டிப்பு, ஆகிய தியாகங்கள், கிறிஸ்துவுக்கு 'முன்னோடியாய் ஓடி' இயேசுவே உரைத்த "....அவன் பெரியவன்" (மத்.11:11) என்பதை நிலைநிறுத்தி, உறுதிப்படுத்தி உள்ளது!*

*புதிய உடன்படிக்கை நாதர் கட்டி எழுப்பும் 'தேவ இராஜ்ஜியத்தில்' அங்குள்ள 'சிறியவன் கூட' யோவான் ஸ்நானகனுடைய ஓங்கிய தரத்தை பெற்றிருப்பான்! என:*

**"இயேசு புளகாங்கித்து எதிர்பார்ப்பது போலவே, நாம் யாவரும் நம் இரட்சகரை ஏமாந்து போகச் செய்திடாமல், யோவான் ஸ்நானகனின் தரத்தை நிலைநிறுத்துவோமாக! இவ்வாறாக, இந்த புதிய ஆண்டிலும், ஆண்டவருக்கு ஓங்குபுகழ் சேர்ப்போமாக! ஆமென்.**

*- T.ரத்தினகுமார்*

---

## இந்த ஆண்டின் ஒவ்வொரு மணித்துளியும், நித்தியமாகட்டும்!


*கர்த்தாவே, நாட்களை எண்ணும் ஞானம் தாரும்*

*__ந__ம் பழைய ஆண்டின் கதியைப் பாருங்கள்! பல நூற்றாண்டுகளாய் கடந்துபோன காரிருளின்.... நீண்ட வரிசைக்குள், கடந்த ஆண்டும் தள்ளப்பட்டுவிட்டது! கடந்த வருடத்தை வைத்து எழுதப்படும் சரித்திர மெல்லாம், கண்ணீரும்! கலகமும்! தீவிரவாதமும்! வீதியில், நகரத்தில் சம்பவித்த கொடூர அசம்பாவித மரணங்களாகவே இருக்கிறது!!*

*வருடத்தில் 365 நாட்களின் மொத்த நேரங்கள் 8760 மணித்துளிகள்! இதில், 2920 மணித்துளிகள் தூக்கத்திற்கும், அதே 2920 மணித்துளிகள் அலுவலுக்கும் போனபிறகு.... மீதி 2920 மணித்துளிகள் உண்டல்லவா? தேவன் சமமாய் பிரித்துக் கொடுத்த இந்த மீதி 2920 மணித்துளிகளை, மனிதன் தன்னை* **நித்தியத்திற்கு ஆயத்தப்படுத்தவே** *அருளியுள்ளார்! இந்த விலையேறப்பெற்ற நித்திய மணித்துளிகளை தேவனோடு செலவழித்தவன் மாத்திரமே ஞானவான்!!*

*- A.W.டோசர்*

## 'சத்தியத்தில் நிலைநிற்கும்' போதகர்
# ஜாண் மேக்ஆர்தர்



ஜாண் மேக்ஆர்தர் 1939-ம் ஆண்டு ஜேக் மேக்ஆர்தர் என்ற ஒரு கிறிஸ்தவ போதகருக்கு *USA* - கலிபோர்னியா மாநிலத்தின் மிகச்சிறந்த லாஸ் ஏஞ்சல்ஸ் பட்டணத்தில் பிறந்தார். தன் கல்லூரிப் படிப்பை முடித்த அதே நாட்களில், கர்த்தர் அவரோடு பேசி ஊழியத்திற்கு அழைத்து உறுதிப்படுத்தினார். அந்த அழைப்பை உடனே ஏற்றுக்கொண்டு 'டால் போட்' (Talbot) இறையியல் வேதாகமம் கல்லூரியில் இணைந்து பயின்றார். அதை குறித்து கூறிய மேக்ஆர்தர் "அன்று ஊழியத்திற்கு என் முன்னங்காலை எடுத்து வைத்த நான் எக்காலத்தும் திரும்பிப் பார்த்ததில்லை" என சாட்சியாய் கூறுவதுண்டு. 1969-ம் ஆண்டு "GRACE - COMMUNITY CHURCH" என்ற பெயரில் சபை ஊழியத்தை தொடங்கி, அந்த சபையின் போதகராய் பொறுப்பேற்றார். தன் ஆரம்ப 50-வருட ஊழியத்தில் பல்வேறு எதிர்ப்புகளை சந்தித்தார். அக்காலத்தில் தோன்றிய "கரிஸ்மேட்டிக் இயக்கத்தை எதிர்த்து" பரிசுத்தாவியை துக்கப்படுத்தும் அபாயமும், போலியான ஆராதனையும் என்ற புத்தகத்தை அந்நிய அக்கினி என்ற தலைப்பில் எழுதினார். இதோடு சேர்த்து அவர் எழுதிய புத்தகங்கள், மார்க்க கிறிஸ்தவர்களுக்கு கோபத்தை ஏற்படுத்தியது!

செழிப்பின் சுவிசேஷம் பரவத்தொடங்கிய அக்காலத்தில் ஜாண் மேக்ஆர்தர், அந்த உபதேசத்தை பகிரங்கமாய் கண்டித்தார். அன்று பிரபல்யமாய் இருந்த 'மெகா சர்ச்' பாஸ்டர் ஜோயல் ஆஸ்டீன், ஜாண் மேக் ஆர்தருடைய ஊழியத்திற்கு எதிராய் இருந்தார். இவ்வித எல்லா எதிர்ப்புகளின் மத்தியில் ஜாண் மேக்ஆர்தர் சத்தியத்தில் உறுதியாய் நின்றார்! மூல பாஷைகளான கிரக்க, எபிரெய மொழியின் வேதாகமத்தை முன்வைத்து தெளிவான சத்தியங்களை எழுதினார்.... 1) வேதாகமம்: இது தேவனுடைய வார்த்தை. எல்லாவற்றுக்கும் போதுமானது. ஆகவே வேதப்புத்தகத்தை முழுமையாக நம்பலாம்! இது தேவனுடைய உயிருள்ள வார்த்தை. 2) சபை: கிறிஸ்துவின் சபை பெந்தெகொஸ்தே நாளில் தொடங்கப்பட்டது. அங்குள்ள மக்கள் மறுபடியும் பிறந்து தங்கள் விசுவாசத்தை இயேசு கிறிஸ்துமேல் வைத்தவர்கள். அவ்வித சபைக்கு கிறிஸ்து ஒருவரே மேலான அதிகாரம் கொண்டவர்! ஸ்தல சபைகள் தனித்தனியே சுதந்திரம் கொண்டவை! முற்றிலும் சொந்த ஆளுமை கொண்டது! ஒரு தலைமை, தன் கிளை அதிகாரங்களை பயன்படுத்தி, கீழுள்ள சபைகளை கட்டுப்படுத்த முடியாததாகும்! ஒரு ஸ்தாபனமும் அல்ல! 3) நித்திய பாதுகாப்பு: நம்முடைய இரட்சிப்பை நிலைநிறுத்திக்கொள்ள, நம் சொந்த திறமையை வைத்து பாதுகாக்க முடியாது. தேவன் ஒருவரே, தம்முடைய வாக்குதத்தங்களை பாதுகாத்திட முழு வல்லமை கொண்டவர்! அதுவே நம் நித்திய பாதுகாப்பு. அதேசமயத்தில் கிறிஸ்தவ சுயாதீனத்தை பாவத்திற்கு பயன்படுத்துவதை வேதாகமம் வன்மையாய் கண்டிக்கிறது! 4) பரிசுத்த ஆவியானவர் : "சத்தியத்தின் முழுமையே" பரிசுத்த ஆவியானவர். அவர் ஒருவரே, சத்தியத்திற்குள் செம்மையாய் நடத்த முடியும். சுவிசேஷங்களை எழுதிய தாசர்களை அபிஷேகித்து, இயேசுவின் வார்த்தைகளை முழுமையாகவும் துல்லியமாகவும் எழுதச் செய்தார்.

ஜாண் மேக்ஆர்தர் அவர்கள் 85-வயதை கடந்து இன்றும் "கிரேஸ் கம்யூனிட்டி சபைக்கு" மேய்ப்பராகவும் போதகராகவும் தன் உடன் மேய்ப்பர்களோடு சேர்ந்து சபையை கர்த்தர் நடத்தி வருகிறார்!

*- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்*

## வாலிபனே, புதிய ஆண்டு "வாழ்க்கைப் பயணம்" கவனம்!

ஸ்காட்லாந்து தேவ மக்கள் 121-ம் சங்கீதத்தை தங்களின் "பயண சங்கீதமாய்" வைத்துள்ளார்கள்! தங்கள் வீட்டிலுள்ளவர்கள் பயணமாய் வெளியூர் செல்லும்போதோ அல்லது வீட்டிற்கு வந்த விருந்தாளி பயணமாய் திரும்பும்போதோ, இந்த 121-ம் சங்கீதத்தை குடும்பமாய் கூடி, வாசித்து, பல சமயங்களில் பாடி அனுப்பி வைப்பார்கள்! மன நெகிழ்ச்சியான வழி அனுப்பு ஜெபத்தில் கண்ணீருடன் "கர்த்தர் உன் போக்கையும், உன் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்" என கூறி அனுப்பி வைப்பார்கள்!

என் தகப்பனார், இளம் வாலிபனாய் இருந்த சமயம், உலகப்போர் மூண்டது! ஸ்காட்லாந்திலிருந்து அமெரிக்க தேசம் போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது! அங்கு சில ஆண்டுகள் ஆரம்பத்தில் இருந்து விட்டு, பத்திரமாய் திரும்பினார்! பின்பு மீண்டும் போரின் உச்சநிலை அறிவிக்கப்பட்டு, மறுபடியுமாய் சில ஆண்டுகள் போர்முனைக்குச் சென்றார். இந்த முறையும், குடும்பமாய் கைகோர்த்து நின்று, வீட்டார் அனைவரும் கண்ணீர் சிந்தி:

"எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராய்
என் கண்களை ஏறெடுப்பேன்! வானத்தையும் பூமியையும்
உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்!
உன் காலைத் தள்ளாட வொட்டார், உன்னைக் காக்கிறவர் உறங்கார்!
இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை, தூங்குகிறதுமில்லை!
கர்த்தர் உன்னைக் காக்கிறவர், கர்த்தர் உன் வலது பக்கத்திலே
உனக்கு நிழலாயிருக்கிறார்! பகலிலே வெயிலாகிலும் இரவிலே
நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை!
கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்!
கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும்
இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார்!

என, வழியனுப்பினர்! சில வருடங்களில், குண்டு காயங்கள்பட்டு, வீட்டிற்கு அனுப்பப்பட்டார்! மருத்துவமனையில் இருந்த காலங்களிலும் 121-ம் சங்கீதம் அவருக்கு புதுபெலன் தந்தது! தன் 87-ம் ஆண்டு மரித்த காலம் வரை, இந்த சங்கீதமே அவரை பெலன் செய்து..... மரணப் பள்ளத்தாக்கை கடந்து, கர்த்தரிடம் சமாதானமாய் போவதற்கு அவருக்கு உதவியது! ஓ வாலிபனே, இந்த ஆண்டாவது உன் வாழ்க்கை பயணத்தை, கர்த்தரிடம் ஒப்படைத்து பயணிக்க, மனந்திரும்புவாயாக!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப QR பயன்படுத்தவும்

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by:
Madurai Christian Fellowship, Regd Society,
*Editor* T.Rathnakumar, Madurai.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi.

maduraichristianfellowship@indianbk